Registered No. M. 878.

279

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.


தொகுதி 6 } 1915ஸு டிசம்பர்மீ ராக்ஷஸஸு மார்கழிமீ { பகுதி 8.


ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்


வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.


Copy Right Reserved.

# பொருளடக்கம்.

## (CONTENTS.)

பக்கம்

280


1. தற்கால நிலைமை. From the Editor. 281

2. பிம்பாராதனை. ச. வெங்கடாசலம் ஐயர் 289
Image worship S. Venkatachalam Iyer

3. மீராபாய் (ஓர் நாடகம்) ஆர். ஸ்ரீநிவாஸையர், M. A.
Meerabahi (a Drama) R. Sreenivasa Iyer M. A. 297

4. ஆசாரம் அல்லது நன்னடக்கை (சிறுவர்க்குரிய விஷயம்.) வஸந்தாநந்தன். 305
Good conduct (children's corner, Vasanthananda.

5. கல்விக் கைங்கர்யம்—ஜே. கிருஷ்ணமூர்த்தி 310
Education as Service—J. Krishnamoorthi

6. தியானக்கிரம விஷயம்—கே யஸ் ராமசந்திர ஐயர்
Meditations from At the Feet of the Master. K S Ramachandrier. 313


---

## பிரஹ்மக்ஞான ஸபை.

இது 1875 ஞு நவம்பர் மீ 17உ நியூயார்க்கு நகரில் உண்டாகி 1905 ஞு ஏப்ரல்மீ 3உ மதராஸில் ஸ்தாபிக்கப்பட்டது. இதின் நோக்கங்கள்:—

1. ஜாதி, மதம், பால், வர்ணம் இவ்வேற்றுமைகளின்றி, மநுஷ்ய வர்க்கத்தினரின் ஸர்வத்ர ஸஹோதர பாவத்தை அதிகரிக்க, அஸ்திவாரமாக அமைவது.

2. ஸமதரிசன் புத்தியுடன் இதர மதங்களையும் தத்துவ சாஸ்த்ரங்களையும் பிரகிருதி சாஸ்த்ரங்களையும் ஆராய்வது.

3. இதுவரை மநுஷ்யனுடைய நேரான அறிவுக்கு எட்டாத பல பிரபஞ்சநியதிகளை வியக்தமாயுணர்வதற்குச் சாதநமாக, மநுஷ்யனிடத்தில் குப்தமாயுள்ள சக்திகளை விகஸிக்கச் செய்வது.

ஓம்

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 } 1915ளு டிசம்பர்மீ
ராக்ஷஸளு மார்கழிமீ { பகுதி 8.

## தற்கால நிலைமை.

ஸஹோதரர்களே!

இந்நாற்பதாம் வருஷோத்ஸவத்திற்கு உங்களை நல்வரவேற்பதோடு, இங்கே கூடியிருக்கும் இம்மஹாஸபையை அநுக்ரகிக்குமாறு, புயல் மேகங்கள் போன்ற அக்ஞான இருள் மூடிய நாம்,மேல்நோக்கித் துதிக்கவேண்டிய ஜகத் ரக்ஷகர்களான குருநாதர்களைப் பிரார்த்திக்கின்றேன் நமது பிரஹ்மக்ஞான ஸபையை இத்தனைநாள் போலவே, இனிமேலும், பரிபாலித்தும் ரக்ஷித்தும் வருவார்களாக. அவர்கள் தமது உண்மை ஊழியர்களான ஹெலினு பேட்

* பம்பாயில் சென்றமீ நடந்த, பிரஹ்மக்ஞான ஸபையின் நாற்பதாவது வருஷமகோத்ஸவத்தில் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார், அக்ராஸனருரையாகச் செய்த பிரஸங்கம். (ப-ர்.)

ரவ்ஞ பிளவாட்ஸ்கீ அம்மையார், ஹென்ரீ ஸ்டீல் ஆல்காட் இவ்விருவர் மூலமாய் ஏற்படுத்திய இச்சபையைத் தமதள விறந்த சக்தியால் காப்பாற்றியும், தேர்ந்த ஞானத்தால் வழி நடத்தியும், இடையறாவுழைப்பால் உற்சாக மூட்டியும் வருவார்களாக.

***

இவ்வருஷ முழுமையும், நமது சபையுள்ள எத்தேசத்திலும் சாந்தமும் ஸமாதானமுமே நிகழ்ந்தனவாயினும் மத்ய ஐரோப்பாவில் உள்ள நமது ஸஹோதரர்களினின்றும் பிரிந்தவர்களாகவே யிருக்கிறோம். திரும்பவும் முன் போல அவர்களைக் கண்ணுறக்கண்டு கைகுலுக்கப் போகிறோமோ என்றுகூடச் சந்தேகிக்குமாறு, யுத்தத்தின் கொடுமை அவ்வளவு கோரமாயிருக்கிறது. மேல்நாட்டு நாகரிகத்தின் அஸ்திவாரங்களையுங்கூட அடிபொட்ட அழிக்கயத்தனித்திருக்கும் இந்த யுத்தத்தால் ஏற்பட்ட துவேஷம என்னும் இரத்தமயமான பிரவாஹம் ஒருவரையொருவர் சமீபிக்கவொட்டாமல் ஊடே பாய்ந்து பிரித்துவைத்திருக்கின்றது. அப்பிரவாஹம் மிகவும் ஆழமாயிருக்கிறது. இது சாமாந்ய யுத்தமானால் இவ்விதம் பிரித்து வைக்க முடியாது. இது ஓர் ஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும் உலக சரித்ரத்தில் அடிக்கடி நிகழ்கின்றயுத்தமல்ல. தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடந்து வருகின்ற யுத்தம். தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் போர் நிகழ்கின்றஇக்காலத்தில் ஆத்ம வித்யா ஸங்கம் எதுவும், ஒரு பக்கத்திலும் சேராமல் ஸமாதானமாயிருக்க முடியாது. அவ்விதமிருப்பின், ஆத்ம வித்யையின் முக்ய தத்துவங்களுக்கு நேர் விரோதமாய் நடப்பதாகும்.

***

## உலகப்போராட்டம்

உயர்ந்த தத்துவங்கள் பல, கதைகள் ரூபமாக விளக்கப்பட்டிருக்கும் புராணங்களில் இத்தகைய தர்மா தர்ம யுத்தங்கள் அநேகம் உள்ளன. உலக நாகரிகத்தின் அபி

விருத்தி மார்க்கத்தில் சிலசில இடங்களில் இரண்டு கிளைகள் பிரிகின்றன. ஒன்று தர்ம மார்க்கம், மற்றொன்று அதர்ம மார்க்கம் அத்தருணத்தில் ஒவ்வொரு ஜாதியாரும் ஏதாவதொன்றை அவசியம் கைப்பற்றும்படி நேருகிறது. எந்தெந்த மார்க்கத்தில் செல்கிறார்களோ, அதற்குத் தக்கபடி அபிவிருத்தியையோ, நாசத்தையோ அந்தந்த ஜாதியார்கள் அடைகிறார்கள். ஹிந்துமதம் ராமராவண யுத்தத்தைப்பற்றிக் கூறுகின்றது. ஜோராஸ்திரியமதம் ஆஹூரா மாஸ்டாவுக்கும், ஆஹ்ரிமானுக்கும் நடந்த யுத்தத்தையும், ஹிப்ரேயமதமும் கிறிஸ்துவ மதமும், தேவன், சாத்தான் என்றும், மஹம்மதீய மதம் அல்லா எப்லீஸ் என்றும் கூறுகின்றன. இப்பெயர்கள் என்ன உண்மையைக் குறிக்கின்றன வென்பதைப் பார்ப்போம். ஆத்மா வானவன் மேன்மேலும் அவனுடைய அபிவிருத்தியை நோக்கிச்செல்கிறதையும், அவ்விதம் ஆத்மாவானவன் வளர வளரச் சரீரமும் வளர்ந்துவருவதையும், பிறகு ஓர் குறித்த அளவுக்குமேல் அச்சரீரம் வளரமாட்டாமையால், ஆத்மாவின் வளர்ச்சிக்குத்தடையாய் ஏற்படுகிறது; ஏற்படவே அச்சரீரம் அழிந்து, முன்னினும் அதிக நயமான புதிய சரீரம் அவ்வாத்மாவுக்கு ஏற்படுகின்றது என்பதையும் பற்பல தேசகாலங்களில் பற்பல ஜாதியார் அறிந்துளர். சரீரம் வளர்ச்சிக்கு உபயோகமாயிருக்கிற வரையில் நன்மையாயும், வளர்ச்சியைத் தடைசெய்கிறபோது தீமையாயும் விளங்குகிறது. இராணுவ பலமும் அரசாங்க முறையில் ஏக அதிபத்யமும் ஓர்காலத்தில்உபயோகமாயிருந்தன. மனிதர்களிற் பெரும்பாலர் அறிவின் விளக்கமற்றிருந்தபோது புத்திமானான ஒரே மனிதனுடைய ஆளுகையும், மனிதர்கள் காட்டு மிராண்டிகளாகவும், அறிவில்லாமல் முரட்டுத்தனமாகவும் இருந்தகாலத்தில், அவர்களை பலத்தாலேயே வெல்வதற்கு இராணுவமும் சைந்யங்களும் அவசியமாயிருந்தன. மேல்நாட்டு முரட்டு ஜாதியார்களுக்குத் தக்கபடி, இருப்புத் தடியையும், உருக்குக் கத்தியையுமே பிரதானமாகக் கொண்டு, நாகரிகத்தை விருத்திசெய்வது

அவசியமாயிருந்தது. ஐரோப்பாவில் இராஜ்யாதிகாரிகளும், மதஸ்தாபகர்களும் முரட்டுத் தனத்தாலேயே, தற்கால நாகரிக அபிவிருத்திக்குரிய அஸ்திவாரங்களைக் கட்டினர்.

***

ஸ்வாதீனம் என்ற தர்மமானது ஐரோப்பிய தேசங்களிற் பரவவே, ஐரோப்பிய சரித்திரத்தின் மத்யகாலத்து உடைகளாகிய பழய தர்மங்கள், நாகரிக அபிவிருத்திக்குச் சரிவரவில்லை. வளர்கின்ற ஆத்மாவைக்கூட பழைய உடைகள் தடைசெய்து நாகரிக அபிவிருத்தியைக் கூழையாக்கிவிடுமோ என்ற பயம் வரவே, பழையது தகர்ந்து போகவேண்டிய ஆவசியகம் நேர்ந்தது.

***

பிரகிருதியில் ஆகாசத்திற் பதிந்திருக்கும் விஷயங்களைப் பார்த்தறிந்த குப்தவித்யையின் பிரகாரம், எல்லாச் சக்திகளுக்கும் ஆதாரமாய் ஈசுவரனின் ஸங்கல்பசக்தி உளதென்றும் ஈசுவர பிரகிருதியானது சரீரமாயும், ஈசுவர புருஷனானவன் சரீரியாயும், புருஷனுடைய உயிர் வலிமையால் பிரகிருதியானது தொழிற்படுகின்றதென்றும், இவ்வுயிரானது மிருகம், மனிதன், தேவர், ரிஷி, ஈசுவரன் இவர்களிடத்தில் எல்லாம் விளங்கியபோதிலும் பற்பல படித்தரமாய் இயங்குகின்றது என்றும், இவ்வுயிரானது ஈசுவர ஸங்கல்ப சக்தியின் ஆதாரத்தைக்கொண்டே சரீரமாகிய பிரகிருதியைத் தொழிற்படச் செய்கிறதென்றும், எந்த ரூபமான கிரியைக்கும் ஸங்கற்ப சக்தியே முதற்காரணமென்றும் நாமறியற்பாலர். ஆகவே விகாஸமுறையில், விகாஸமுறைக் கநுகூலமான ஸங்கல்ப சக்தியுமுள்ளது. விகாஸமுறையைத் தடைசெய்யும் சக்தியுமுள்ளது. மநுஷ்யர்களைப்போலவே, தேவர்களும் இவ்விருவித போராட்டங்களுக்கு நடுவே ஊசலாடுகின்றனர். புதிய நாகரிகத்திற்கு எது அநுகூலமாயிருக்குமோ, அம்மார்க்கத்தில் செல்லும் ஜாதியர்களே விருத்திக்கு வருவார்கள். மற்றவர்களின்

கதி அதோகதிதான். பிரத்யக்ஷமாய் பூலோகத்தில் மனிதர்கள் தன்னை மறந்து சண்டை செய்வதுபோலவே, ஸூக்ஷ்ம லோகத்திலும் சண்டை நடந்துகொண்டிருக்கிறது இனி வரப்போகும் அநேகவாயிர வருஷங்களுக்கு மநுஷ்ய வர்க்கத்தின் ஸ்திதியை பாதிக்கக்கூடிய இத்தகைய யுத்தங்கள் பூலோகத்தில் நடக்கும்போதெல்லாம், ஸூக்ஷ்ம லோகத்திலும் யுத்தம் நடக்கின்றது. விகாஸமுறையில் ஈசுவர ஸங்கல்பம் நிறைவேறுமாறு உழைக்கிற ஸூக்ஷ்மலோக வாஸிகள்தான், உலகின் ஆளுகையை வகிக்கின்ற தேவ, ரிஷி கணங்களாவர். இவர்களுக்கு ஈசுவர ஸங்கல்பத்தின் பயனான பலம் அநுகூலமாயிருக்கிறது. இதற்கு விரோதமாகச் சிதைந்துபோன பழைய வழக்கங்களிலேயே முரண்டிக்கொண்டிருப்பவர்கள் அஸுரர்களாவர். இருதிறத்தார்களும் மனிதர்கள் மூலமாகவே தங்கள் ஜயத்தையோ, அபஜயத்தையோ அடைகிறார்கள். மேலுலகத்தில் நடப்பதன் நிழலே இவ்வுலகத்தில் விளங்குவதாகும். தேவர்களும் அசுரர்களும் மநுஷ்ய வர்க்கத்தின் ஆளுகையைக் குறித்தே சண்டை செய்துகொள்கிறார்கள். இத்தகைய சண்டையின் முடிவுதான், கிறிஸ்தவர்கள் சொல்கிறபடி ஓர் ஜாதியாரின் "நியாயத் தீர்ப்பு நாள்" ஆகும்".

***

இந்த யுத்தம் மேலுலகப் போராட்டத்தின் சாயையாகையால்தான், குப்தவித்யையிற் பயிலுவோன் எவனும் ஒரு கட்சியையும் சேராதிருக்க முடியாது என்று சொன்னேன். அவனுடைய பூர்ண சக்தியையும் ஏதாவதொரு கட்சிக்காகவேதான் உபயோகிப்பான். ஒரு பக்கத்திலும் சேராமலிருந்தால் துரோகியாவான். ஜெர்மானியர்களுடைய ஸைந்யமானது அசுரர்களது வசப்பட்டிருக்கிறது. வருங்காலத்திற் கேற்காத ராஜாங்க முறையாகிய ஏகாதிபத்யச்செருக்கும், இராணுவபலச்செருக்குமே அவர்களது

கொள்கையாயிருக்கிறது. "கடைசி முடிவைக்கொண்டு அவர்களை நீங்கள் நிதானிக்க முடியும்", காமவெறிகொண்டும் ரத்தவெறிகொண்டும் ஸ்திரீஹத்தி செய்துவந்த சில கொடியர்களை நினைத்து, இவ்விதம் யூகிக்கின்றேனல்லன். ஜெர்மானியர்களின் ராஜ்யத்தின் தர்மமே என்னவெனில், அந்யர்களை "ஹிம்ஸையாலும், பயமுறுத்தியும்" வெல்ல வேண்டுமென்பதேயாம். தற்கால நாகரிகத்திய ஜாதியார், எவருக்கும் அங்கீகாரமாகாத யுத்த தர்மங்களைக் கைக்கொண்டு, பண்டைக் காலத்தில்கூட யுத்த தர்மத்திற்குப் புறம்பாக விலக்கப்பட்ட அக்ரமங்களைப் பகையின் ஆவேசத்தால் செய்து வருகின்றனர். தமது தேசம் செழிக்கும் பொருட்டுப் பிறதேசங்களை யபகரிக்கலாம், பகைக்கலாம் என்னும் கொள்கையுடையவர்கள் ஜெர்மானியர்கள்.

***

வெள்ளியம்பலத்தின் ஊழியர்களான நமக்கோ, அன்புதான் பரம நற்குணமாகும். ஸஹோதர பாவத்தையும், ஸஹகாரித்வத்தையுமே பிரதான லக்ஷணங்களாயுடைய நாகரிகந்தான் இனி நிலைபெறத்தக்கது என்பதே நமதபிப்பிராயம். ஆகையால் நாம் ஜகத்ரக்ஷகர்கள் பக்கமேதான் சேருவோம். நியாயத்திற்காகப் போராடும் பிரிட்டிஷ்காரருடைய கட்சியே நமக்கு அங்கீகாரம். நியாயத்தைவிட்டு முரட்டு பலத்தால் மட்டும் முன்னுக்கு வரலாம் என்ற துணிபையுடைய ஜர்மானியர்கள் நமக்கொருபோது மங்கீகாரமாகார்: வெள்ளியம்பலத்தாராலும், அவர்களின் அடியார்களாலும் தாபிக்கப்பெற்ற நமது பிரஹ்மக்ஞான சங்கமானது, விகாஸமுறையில் ஈசுவர சங்கல்பத்திற்கு அநுகூலமாய் யுத்தம் செய்யும் கட்சிக்காகவே உழைக்க வேண்டும். இவ்வித நடபடிக்கையால்,மத்ய ஐரோப்பாவிலுள்ள நமது சங்கத்தார், நமது சங்கத்தைவிட்டு விலகிய போதிலும் நாம் கவலைப்படவேண்டாம். மஹான்களின் அநுக்ர

ஹத்திற்குப் பாத்ரமாகாமற் போவதைவிட நமது மெம்பர்கள் விலகிப்போவது பெரிய நஷ்டமாகாது. துன்மார்க்கத்தில் சேர்ந்து கௌரவமடைவதைக் காட்டிலும், ஸந்மார்க்கத்தில் சேர்ந்து அழிந்து போனாலும் போகலாம்.

***

[உலகமுழுமையிலும் நமதுசபை உழைத்துவர்திருக்கின்ற முயற்சியைப்பற்றிப் பேசிப்பின்வரும் முடிவுரை கூறலானார்-ப-ர்.]

நமது சங்கம் எங்கெங்கிருக்கின்றதோ அங்கெல்லாம், பிறர் நலத்தில் மிகவும் உழைப்பவர்கள் என்று நாம் கருதப்படுவதாலும், குப்த வித்யைதான் நவீன பௌதிகசாஸ்திர முறையையுந் தழுவுகிற மதமென்று கருதப்படுவதாலும், இப்போது நவீன பௌதிக சாஸ்திரமும் முன்னினுமதிகமாய் விருத்தியடைந்திருப்பதாலும், நமது பொறுப்பும் உத்தரவாதமும் மிக அதிகரித்திருக்கின்றது. அதற்குத் தக்கவாறு, பற்பலமத ஆராய்ச்சி வாயிலாகவும், யுக்தி பூர்வமாகவும், நீதிமுறையை வற்புறுத்தியும் பிறருக்கு ஏற்ற வழிகளில் நாம் உதவிபுரிய வேண்டியவர்களாயிருக்கிறோம். நுனிப்புல் மேய்வதுபோல் வேலை செய்வது, அக்ரமமான பாதகம் என்று கூறலும் பொருந்தும். பொது ஜனங்கள் நம்மைச் சந்தேகிக்குங் காலத்திலாவது, அவர்கள் குற்றங் கண்டு பிடிக்காவண்ணம், ஜாக்ரதையாய் நடந்துவருவோம் நம்மைப் பிறர் கௌரவத்தோடு பாராட்டிவரும் இக்காலத்தில்தான், நம்மைநாமே பிரதி நிமிஷமும் சீர்திருத்திக் கொள்ளவேண்டும். பிரஹ்மக்ஞானி ஒவ்வொருவனும் உண்மையாகவே பொதுநலங் கருதிய உழைப்பைக் கைக்கொள்வானாகையால், அவனவன் எத்தகைய சிலாக்யமான கைங்கர்யத்தை பகவானுக்கு அர்ப்பணம் செய்யலாம் என்பதைச் சிந்திக்கக் கடவன். சுத்தத் தங்கத்தையும், கலப்பு உலோகங்களையும் அக்நியானது எவ்விதம் பிரித்தே காண்பிக்குமோ அவ்விதம் ஈசுவரன் முன்னிலையில் நாம் எண்ணித் துணியும் கருமத்தின் யோக்யதையும் விளங்கும்.

ஸஹோதரர்களே! உலகினர் பெரும்பாலர் அறியாத ஓர் பெரிய உண்மையை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். தற்கால நிலைமையானது அதிசமீபத்தில் விடியப்போகிற சுப காலத்தைக் குறிக்கின்றதென்பது உங்களுக்குத் தெரியும். அக்காலத்தில் உதிக்கப்போகின்ற லோககுரு ஒருவர்தான் இவ்வுலகில் ஸமாதானத்தை யேற்படுத்திப் புதிய நாகரிகத்தை நிலைநிறுத்துவர். அந்த சுபகாலத்திற்குக் காரணஸ்தரான லோககுருவின் ஜனனததிற்குமுன் ஏற்படுகின்ற பிரஸவ வேதனைகள்தான் யுத்தம்முதலிய தற்காலக் குழப்பங்கள் அனைத்துமென்றறிக. ஆயினும் லோககுருவின் உதயத்திற்குப் பிறகேற்படுவது அளவிலா வானந்தமும், பரிபூர்ணமான ஸமாதானமுமன்றோ! ஆகையால் நாம் விசனிக்கவேண்டுவதேன்! தைர்யமாயிருங்கள். பிரஸவ அறையில் இப்போதிருந்து மருத்துவம பார்த்துக்கொண்டிருக்கிறோம். செல்வகுமாரன் பூமியில் உதிப்பது நிச்சயம். அவர் வரவு எதனாலும் தடைப்படாது. எத்தகைய பெருங்கார்யமும் மிகுந்த சிரமமின்றி இலேசாய் முடியாது. புயற்காற்றும் கரிய மேகங்களும் சேர்ந்து ஆகாயத்தை மறைப்பினும், ஒரு க்ஷணத்தில் அவைகலைந்து, ஆகாயந் தெளிந்து அன்பே உருவெடுத்த நக்ஷத்ரம் எவ்விதம் பிரகாசிக்கின்றதென்பதை அறியீர்களா? பெரும்பாலர் துக்கக் கண்ணீரால் பார்வை மங்கியவர்களாயிருக்கிறார்கள். ஞானிகள் லோகநாதரின் ராஜசின்னமான நக்ஷத்ரத்தைப் பிரத்தியக்ஷமாய்த் தரிசிக்கின்றனர். அது அவரது அளவிறந்த பராக்ரமத்தாலும், பூர்ண அன்பாலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஸஹோதரர்களே! மேகங்கள் மூடியிருக்கும் இத்தருணத்திலும் நீங்கள் மேல் நோக்குவீர்களாயின் நக்ஷத்திரத்தைக் காணலாம்.

---

289

# பிம்பாராதனை.

பூவுலகில் நிகழாநின்ற எந்த மானிடவர்க்கத்தை எடுத்துப் பார்த்தாலும், அவை ஒவ்வொன்றும் ஈசனை வழிபட ஒவ்வொரு உபாயம் தேடியிருக்கிறதாகக் காணப்படும். இந்த உபாயத்தைத் தேடாத மானிடக்கூட்டர் காட்டுமனிதர்க (Savages) ளேயாவார்கள். இந்த உபாயங்கள் வெளிப்பார்வைக்கு வெவ்வேறாகத்தோன்றினாலும், கடைசியில் ஒரே உத்தேசத்தில் தான் போய்ச் சேருகின்றது என்பது சிறிது ஆராய்ச்சியுடையவர்க்கும் புலப்படும்.

இஃது இங்ஙனமிருக்க கடவுளை சில ரூபமாக ஆராதிப்பது அநேகம் மதங்களில் நடந்து வந்தாலும், இந்து மதத்தில் அது அதிகமாக நடக்கின்றது பற்றியோ, வேறெந்தக் காரணம்பற்றியோ அதைச்சிலர் இகழ்கிறார்கள். தேவனை எந்த ரூபத்தில்தான் ஆராதிக்க வேண்டுமென்று ஒருவருக்குந் தெரியாது. கடவுளைப்போய் பார்த்துவந்தவர்கள் யாருமில்லை. அப்படிப்போய் யோகதிருஷ்டியால் அறிந்துப் பெரியோர்கள் சொல்லியிருப்பதை இப்போது நம்பவும் மாட்டார்கள். தற்கால நாகரிகத் தவர்கட்கு ரஸாயன சாஸ்திரத்தில் சோதனைகள் செய்து காண்பிப்பதுபோல்காண்பித்தால் ஒருவேளை நம்புவார்களோ? என்னவோ! அப்படிக் காண்பிக்கவும் தடையில்லை. வழியிருக்கிறது, படித்து அநுஷ்டியுங்கள் என்று சொன்னால், காசிற்கு பிரயோஜனமில்லாத வித்தையைக் கற்றென்ன செய்வது என்கிறார்கள்!

இதைவிட்டு ஈசனுடைய குணங்களைப் பிரித்துப்பார்ப்போம். ஈசன் எங்கும் நிறைந்தவராயும், சச்சிதானந்த ஸ்வரூபராயும், வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதவராயும், எல்லாவற்றையும் தரித்துக்கொண்டிருப்பவராயும் இருக்கிறார். "அவனன்றி ஓர் அணுவும் அசையாது." பகவத்கீதையில்

மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய।

என்று சொல்லியிருக்கிறது. அதின் பொருள் என்னைத் தவிர்த்து வேறே யாதொன்றும் கிடையாது" என்று விளங்கும். இனியும்

விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்னமேகாம்சேன ஸ்திதோ ஜகத்।

'என்னுடைய ஒரு அம்சத்தினால் இந்த ஜகத் முழுதும் வியாபித்துக்கொண்டு நான் இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். இப்படி எத்தனை அம்சங்கள் அவருக்கு இருக்கக்கூடும்? பாகவதத்தில் கிருஷ்ணபகவானை பார்த்து பிரஹ்மா சொல்லுகின்றார்.

க்வேத்ருக்விதாவிகணிதாண்டபராணுசர்யா
வாதாத்வரோமவிவரஸ்ய ச தே மஹித்வம்।

"நமது தேகத்திலிருக்கும் ரோம த்வாரங்கள் வழியாக எப்படி அணுக்கள் புகுந்து வெளியே வருகின்றனவோ, அதைப்போலபூகோளங்கள் பகவானிடம் சஞ்சரிக்கின்றன. ஆகையால் அவர் எவ்வளவு மகானுயிருக்கவேண்டும்,

"Whither shall I go from thy Spirit? Or!
Whither shall I flee from thy presence?
If I ascend up into heaven, thou art there
If I make my bed in hell, behold! thou art there
If I take the wings of the morning and dwell in the uttermost parts of the sea, even there shall thy hand lead me and thy right hand shall hold me"

(Psalm 139)

"தங்களுடைய சைதன்னியத்தை விட்டு நான் எங்கு செல்வேன்? தங்களுடைய சந்நிதியைவிட்டு நான் எவ்விடம் பறப்பேன்? நான் ஸ்வர்க்கத்திற்கு போனாலோ அவ்விடத்திலும் தாங்கள் இருக்கின்றீர்கள். நான் நரகத்தில் விழுந்தாலோ ஆச்சரியமே! அவ்விடத்திலும் தாங்களுண்டு. அருணனுடைய காலைக்கிரணங்கள் தட்டாமலிருக்கும் கடலை நாடிச் சென்றாலோ அவ்விடத்திலும் என்னைக் காப்பாற்றுவது தங்களது திருக்கரங்களே தங்களது வலதுகை தான் என்னைக் கரையேற்றுவதும்." என்று கிருஸ்தவ முனிவர் ஒருவர் சொல்லுகிறார்.

"He hath no form, colour or outline" (Adi gran the Sahib Sorath!)

"அவருக்குரூபமோ வர்ணமோ அதிரோ கிடையாது."

"There is no God but He. He is the High, the Mighty. All is from God." (Quoran Ch. IV.)

"அவரல்லால் தெய்வமில்லை. அவர்தான் மேலானவரும் சக்திமானும், எல்லாம் அவரிடத்தில்தான் இருக்கின்றது." என்று மகம்மதீய குரு சொல்லுகின்றார்.

இப்படிக்குள்ள குணங்களோடு கூடியிருக்கும் ஈசனை எப்படித் தியானஞ் செய்வது? ரூபமில்லாத ஒரு வஸ்துவும் நம்முடைய மனதில் நிற்காதே? ஓர் சிறிய உவமையை எடுத்துப் பார்ப்போம். திரிகோணத்தைக் குறித்து ஒருவன் தியானம் பண்ணத்தொடங்கினால், அவனுக்கு மூன்று கோடுகளினால் அதிரிடப்பட்ட ஓர் இடம் என்றும் அதற்கு மூன்று கோணங்கள் உண்டு என்றும் மனதில் தோற்றுமே யொழிய வேறொன்றும் தோற்றாது. இவையல்லால் திரிகோணத்தின் தத்துவங்களாகிற (properties) இரண்டு கோடுகளின் நீளம் கூடினால் மூன்றாவது கோடின் நீளத்துக்கு அதிகமாக இருக்கவேண்டுமென்றும் திரிகோணத்தின் மூன்று கோணங்கள் சேர்ந்தால் 180 டிக்ரிக்கு சமமாக இருக்கவேண்டுமென்றும் தோற்றாது. ஏனென்றால் இவை இரண்டும் ரூபத்தோடுகூடின திரிகோணங்களினின்றும் ஆராய்ச்சிசெய்து அறிந்த குணங்களேயாம். ரூபத்தோடு கூடினவைகளை மாத்திரந்தான் நமது ஸ்தூல மனதில் காணலாம். குணங்களைக் காண முடியாது. இதுபோலவே சத்தியம் என்கிற ஓர் குணத்தை எடுத்து நாம் யோசித்தால் சத்தியவான்களாயிருந்த ஹரிச்சந்திரன் முதலிய மகான்கள் ரூபம் மாத்திரம் மனதில் தோற்றுமேயொழிய வேறொன்றும் தோற்றாது. குணத்தோடு கூடின இடத்திலிருந்து குணத்தை மாத்திரம் பிரித்துப் பார்க்க நம்முடைய மனதிற்குச் சக்தியில்லை. பகவானோ சகல குணங்களும் பொருந்தினவரும் ஒரு ரூபமுமில்லாதவருமாயிருக்கிறார். அவரை எப்படி தியானிப்பது?

என்? ஏதாவது ஓர் குணத்தை தியானம் பண்ண அந்தக் குணத்தோடு கூடின ஓர் ரூபத்தை எடுத்து தியானம் பண்ணுகிறார்களல்லவா? அதுபோல் சகல குணங்களும் பொருந்தின ஓர் ரூபத்தை ஏன் தியானம் பண்ணக்கூடாது? அப்படிக்குள்ள ரூபம் நமது அறிவிற் கிடையாதா? என்று வினவினால் கிடையாது என்றுதான் பதிலளிக்கவேண்டும். கிடைத்துவிட்டால் அது ஈசுவரன் ஆய்விட்டதே! பிற்பாடு நமக்குக் காணவேண்டியது ஒன்றுமில்லையே! ஆதலால் சாதாரண ஜனங்களைவிட அதிகம் சத்குணம் பொருந்தினவனை ஒருவனுக்கு சகல குணங்களும் தன்னுடைய அறிவிற் கெட்டியவரை பொருந்தியிருப்பதாகத் தியானஞ் செய்வது சரியேயாகும். அது பற்றியே ஒவ்வொரும்தத்திலுள்ளோரும் அந்தந்த மதஸ்தாபகர்களுக்கு சகல குணங்களும் பொருந்தியிருப்பதாக பாவித்து அவரைக் கொண்டாடித் தியானஞ் செய்கிறார்கள். இந்து மதத்தில் மதஸ்தாபகர் என்று சுட்டிக்காண்பிக்க யாருமில்லாவிட்டாலும் ஈசுவரனுடைய சகல குணங்களையும் வகுத்து ஒன்றோ இரண்டோ குணங்களை மாத்திரம் காலதேசபேதமனுசரித்துப் பிரகாசிப்பித்துக்கொண்டு அதை ஜனங்களிடையில் பரவச்செய்த மகான்கள் அவதரித்திருந்தார்கள். அவர்களைக் கொண்டாடித் தியானம் பண்ணுகிறார்கள்.

தியானம் பண்ணுகிறதற்கு முன்னிலை ஏகாக்ரசித்தமாம். மனம் ஒரே நிலையிலிருக்காவிட்டால் தியானம் பலிக்காது. ஆதலால் மனதானது ஏகாக்ரமாயிருக்க உபாயங்களை முன்னரே தேடவேண்டும். பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகளுக்கு மனதை ஒரே நிலையில் நிறுத்திப்படிக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். ஆனால் அத்துடன்

படிக்கும் திறமையுடைய பிள்ளைகள் குறைவு. படிக்கும் பிள்ளைகளை நாம் நன்றாகக் கவனித்து அறிந்தோமானால் மனதை ஒரே நிலையில் நிறுத்திப் படிக்கும் பிள்ளைகள் அதிகமாக வாசிக்கமாட்டார்கள். ஒரு பாடத்தை ஒரு தடவை அவர்கள் படித்தால் உடன் மனதில் பதிந்துவிடும். இதல்லாது பெரும்பாலும் பிள்ளைகள் மனதில் வேறு எண்ணங்களுடன் வாசிக்கின்றார்கள். அதினால் அப்படிப் படிக்கும் பாடம் நன்றாக மனதில் பதியாமலிருப்பதோடுங்கூட உடனே மறந்துபோய் விடும். இதிலிருந்து நாம் அறிவதாவது, மனது ஒரே நிலையிலிருக்க வேண்டுமென்பது ஈசுவர விசாரணைக்கு மாத்திரமல்லாமல், மற்ற செய்கைகளுக்கெல்லாம் அவசியம் வேண்டுமென்பதாம். மனிதனுடைய மனதானது குரங்குபோல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கின்றது. மனதைத்தன்னிடத்தில் இழுக்கச் சக்தியுள்ள ஏதாவது ஓர் குணத்தை உடைத்தான வஸ்துவில் நமது மனதை நிறுத்தினால் அந்த மனதானது சீக்கிரம் ஒரே நிலையில் வந்துசேரும். பிரகாசமயமான சூரியனானுஞ்சரி, எரிகின்ற தீயானாலுஞ்சரி, சோஷிக்கின்ற சமுத்திரமானாலுஞ் சரி, நேத்திரானந்தமான சோலையானாலுஞ் சரி, காதுக்கு இன்பத்தைக் கொடுக்கும் கானமானாலுஞ் சரி, இவைகளை யெல்லாம் தெய்வ ரூபமாக ஆராதிப்பதனால் விரைவில் மனதின் ஒரே நிலையை அடையலாம்.

இவைகளெல்லாம் நாம் எண்ணுகிற சமயங்களிலும் எண்ணுகிற இடங்களிலும் அவசியம் போல் வந்து நிற்கா. ஆதலால் இவைகளைத் தெய்வமாகக் கொண்டாட இவைகளில்லாத சமயங்களில் இவைகளைக்குறித்து தியானம் பண்ண, மனது ஓர் மேலான நிலையை அடைந்திருக்க வேண்டும். மனதானது அந்த நிலையை அடையாத ஜனங்

களுக்கு அதில் நின்றும் குன்றினதாக ஓர் நிலை ஏற்படுத்திக்கொடுப்பது மதாசார சீர்திருத்தம் செய்பவர்களுடைய கடமையல்லவா? அதை யெண்ணி, முன்னோர்கள் எவ்விடங்களிலும் எந்த சமயங்களிலும் அதிகமாக அழியாமலிருப்பதாயும் உபயோகிப்பதற்கு சௌகரியமாயும் மந்திரங்களினுலுண்டாகும் தேவதா ரூபங்களுக்கு அநுரூபமாயுள்ள பிம்பங்களை உண்டுபண்ணி யிருக்கிறார்கள். இந்த ரூபங்களைத் தன் குடும்பத்திற்கு உபயோகமாகவிருக்கும்படி வீட்டிலோ, தன் கிராம ஜனங்களுக்கு உபயோகமாகவிருக்கும்படி கிராமத்திலே பொதுவிடத்திலோ நகரிலுள்ளோர்களுக்கு சௌகரியமாகும்படி, அந்நகரிலோ, ஓரிடத்தமைத்து ஆராதித்தல் வேண்டும். இப்படி ஆராதிப்பதில் மனதானது அந்த ரூபதனிடத்தில் பதிந்து ஓர் நிலையை அடைகின்றது. பிம்பாராதனை வருவதற்கு முந்திய வைதிககாலத்தில் ஜபம் என்கிற அப்பியாசத்தினுலேயே ஏகாக்ர சித்தம் அடைய வழியமைத்து வைத்திருந்தார்கள். இதில் தேர்ச்சியடைந்து யோகத்தை அப்பியாசம் செய்தவனுக்கு மந்திரங்களுக்கு ஆதாரமான தேவதைகளை நேரிற் காணலாம். அவ்விதம் இல்லாதவர்களுக்கு மேற்செல்லுங்கால் எளிதாயிருக்குமாறு அதே ரூபத்திலுள்ள மூர்த்திகளை ஸ்தூல ரூபத்தில் தியானம் பண்ணிக்கொண்டிருந்தால் யோகத்திற்கு முன்னிலையான ஏகாக்ரசித்தம் சம்பாதிக்கலாம்.

மேலும் மனிதனிடத்தில்குடிகொண்டிருக்கும்சுயநயம் (Selfishness)போனுலன்றி அவனுக்கு ஈசனது குணங்களை அநுபவிக்கமுடியாது. தன்னயம் போக்கிப் பிறர் நயமனு

பலிக்கவேண்டுமென்று ஜடமாயாவாத சாஸ்திரிகள் (Material Scientists) கூட ஒப்புக்கொள்ளுகிறார்கள். அந்தத் தன்னயம் விடுவதற்கு மனிதனின் இயல்பான பொருள்களை பகவானுடைய ரூபத்துக்கு என்று கொடுக்கவேண்டும். அப்படிச் செய்து வந்தால் எளிதில் மனிதனுடைய தன்னயம் நீங்கிவிடும். மாலை, சந்தனம் முதலான போகங்களில் அதிகமான பற்றுதலையுடைய ஒருவன் எவ்விதம் அவைகளை பகவானுக்கு கொடுப்பது? ஜடமான பதார்த்தங்களை ஜடமான ஈசுவரனுக் கன்றோ கொடுக்கமுடியும் ஆதலால் ஜடமான ஒரு ஈசுவரனை ஒன்றை உண்டுபண்ணி வைக்கவேண்டும். தம்முடைய ஒருபொருளை பிறர்க்களிப்பதில் மனமில்லாத தாழ்ந்த படியிலுள்ள (undeveloped) மனிதன் கூட பகவானுக்குக் கொடுத்துதான் அணியவேண்டுமென்று உபதேசித்தால் அனுசரிப்பான். ஏனெனில் இவன் உண்டுபண்ணி வைத்திருக்கும் பகவான் இவனது பொருளைக் கவர்ந்தெடுக்கமாட்டாரென்று அவனுக்குத் தெரியும். ஆதலால் அவ்விதம் பழக்கினால் பகவானுக்கு பகவானுக்கு என்று எல்லாவற்றையும்கொடுக்க மனமுள்ளவனாகிறான். அவனது தன்னயம்குறைந்து வருகிறது.

இக்காரணங்களால் ஈசுவரனை அறியப்போவதற்கு ஏற்படுத்தப்பட்ட உபாயங்களில் இந்த பிம்பாராதனையானது முதல் படியாகும்.

ச. வெங்கடாசலம் ஐயர்.

---

# மீராபாய்.

(258-ம் பக்கத்தொடர்ச்சி.)

## அங்கம் I. களம் 4.

காலம்—மாலை. இடம்—கும்பாஜிராணுவின் தனியறை. நாடக பாத்திரர்—கும்பாஜி.

கும்—(தனக்குள்) சுந்தரி சொன்னது உண்மையாயிருக்கக்கூடுமோ? உண்மையாகத்தா னிருக்கவேண்டும். அவளுக்குத் தன்னுடைய சகோதரியைப்போல் பாவித்து வருகிற மீராவிடத்திலென்ன விரோதமிருக்கக்கூடும்? ஒரு விதமான துவேஷமுமிருக்க இடமில்லையே. பார்க்கப்போனலவளிடத்திலிருக்கும் குற்றங் குறைகளை யெல்லா மொளித்து அவளைப் பற்றிப் புகழ்ந்தல்லவோ பேசவேண்டும்! அப்படியிருக்க இந்த மாதிரி சுந்தரி சொல்வதென்றால் ஏதோ பெரிய காரணமிருக்க வேண்டும். என்னிடமவள் முழுவது முரைக்கவில்லை. இவள்தான் ராணுவின் பட்ட மஹிஷி யென்பதை மறந்து தன் கௌரவத்தைத் துறந்து பரதைபோல் நடந்து கிருஷ்ணாலயத்துக்குச்சென்று பஜனை செய்வதாவது? இதற்குமுன் னிவ்வரண்மனையி லெவ்வளவோ ராணிகளிருந்ததில்லையா? இப்போதுதான் சுந்தரியில்லையா? அவர்களில் யாராவதிப்படி இருந்ததுண்டா? என் குலத்தின் யசஸைக் குலைக்க இந்த மீராபாயிப்படி யெல்லாம் செய்கிறாள்! ஜனங்களிவளைப்பற்றி ஏனிகழ்ந்து பேசமாட்டார்கள்? இவளுதைபோல் நகரத்துக்கு வெளியிற் சென்று மானம் வெட்கமொன்றையும் பாராமல் பாடினால் நகரத்தி லுள்ளவர்களு மின்னுமிந்த அரண்மனையிலுள்ள சேவகர்களும் சேடிகளுமேனிவளைப் பற்றி நிந்தனையாய்ப் பேசமாட்டார்கள்? இப்போது சுந்தரியில்லையோ? அவள்

மீராவைவிட எந்த விஷயத்திற் தாழ்ந்தவள்? அழகு குறைவா? புத்தியில் குறைந்தவளா? சங்கீதந்தான் கீழ்ப்பட்டதா? எந்த விஷயத்திற்தா னவளுக்கு சுந்தரி கீழ்ப்பட்டவள்? இவ்வளவு நாளாய் சுந்தரி என் மனம் கோணமலு மென்பெயர் கெடாமலு மென்னை யொருவரும் நிந்திக்காமலும் நடந்துவரவில்லையோ? என்னவோ, என் மனதிற்குக் கொஞ்சங்கூட இது பிடிக்கவில்லை, சந்தேகமாய்த் தானிருக்கிறது. சுந்தரி அன்று சமாசாரம் சொன்னது முதல் எனக்கிந்த மீராவைக் காணும்போதெல்லாம் ஒருவித அருவருப்புண்டாகின்றது. வாய்விட்டுரைப்போ மென்றாலோ என்ன உரைக்கின்றதென்று எனக்கொன்றும் தோன்றவில்லை. இவளை யென்னசெய்கிறது? இந்த விஷயத்தைப் பற்றி வேறு யாரிடத்தில் யோசிக்கிறது? மந்திரியோடு யோசிக்கலாமா? அவர் பெரியவர்தான், நிரம்பவும் அநுபவமுள்ளவர், தீர்க்காலோசனை யுள்ளவர், ராஜ்ய பரிபாலன விஷயத்திலவருடன் யோசித்து நான் செய்ததொன்றும் தவறினதில்லை. அவரிடத்தி லவ்விஷயமாக நான் யோசனை கேட்காம லிருந்ததும் கிடையாது. ஆனாலிந்தமாதிரியான சங்கதிகளைக் குறித்து நானவரிட மிதுவரையில் யோசித்தது கிடையாதே. இப்போதுமட்டும் யோசிக்கலாமா? வெகுநாளா யிவ்விராஜ்யத்திலேயே மந்திரியா யிருக்கிறார். இங்கிதம் நன்றாய்த் தெரியுமவருக்கு. மேலுமெனது தகப்பனாரென்ன ரகசியமான காரியமாயிருந்தாலு மதைப் பற்றி இம்மந்திரியினிடத்தில் யோசனை கேட்கலாமென்றடிக்கடி சொல்லியிருக்கிறார். அவரிடத்திலிந்த சமாசாரத்தைச் சொல்லி அவருடைய அபிப்பிராயத்தை யறிகிறேன். அடே, சேவகா!—(மந்திரி வருகிறார்) ஓஹோ, மந்திரியே இங்கு வந்துவிட்டாரே.

மந்திரி—வந்தனம், மஹாராஜ்.

கும்—மந்திரி, உம்மிடத்திற் சில முக்கியமான விஷயங்களைக் குறித்துப் பேசவேண்டும். மனதிலொன்றையு மொளிக்காமல் உம்முடைய உண்மையான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவேண்டும்.

மந்—அப்படியே ஆகட்டும், மஹாராஜா.

கும்—என்னுடைய பாட்டனர் காலம் முதல் நீரிவ் விராஜ்யத்துக்கு மந்திரியாயிருந்திருக்கிறீர். ஒரு விஷயத்தின் குணுகுணங்களைப் பகுத்தறிவீரென்கிற பூர்ண நம்பிக்கை யெனக்குண்டு. என் மனதிலிப்போது ஒரு பெரிய கலக்கமுண்டாயிருக்கிறது. அதை நிவர்த்தி செய்ய உம்மை யோசனை கேட்கப் போகிறேன்.

மந்—அப்படியே செய்யுங்கள். எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன்.

கும்—இதுவரையிலெவ்வளவோ ராஜஸ்திரீகளை இவ் விராஜ்யத்திலேயு மின்னும் வேறுள்ள ராஜ்யங்களிலேயும் பார்த்திருப்பீரல்லவா? அவர்களில் யாராவதிந்த மீராவைப் போலிருந்ததுண்டா?

மந்—அவளைப் போலிருக்க முடியுமா? அது சுலபமான காரியமா? அவளைப் போலொத்த ஜீவன்களிப் புவியிற் பிறப்பது வெகு துர்லபம்.

கும்—நான் சொன்னதை நீர் நன்கறியவில்லை.

மந்—தாங்களென்ன சொன்னீர்கள்?

கும்—இந்த மீராபாய் மற்ற ராஜப ஸ்திரீகளைப் போலிராமல் தன்னுடைய ஸ்திதியை மறந்து தன் கௌரவத்தைக் குறைத்துக்கொள்ளுகிறாளல்லவா?

மங்—(ஆச்சரியத்தோடு) அதெப்படி மஹாராஜ்? தங்களுக்கும் தங்கள் ராஜ்யத்துக்கும் சிரேயஸைக்கொடுக்கத் தக்க ஸ்திரீ சிரோமணி யென்றல்லவோ நான் கருதியிருக்கிறேன். அப்படித்தான் தாங்களும் நினைத்திருக்கிறீர்களென்று மெண்ணியிருந்தேன். தாங்களிப்படி அபிப்பிராயப்பட்டிருப்பதெனக் காச்சரியமாகவே இருக்கிறது.

கும்—மந்திரி, நீர் நன்ருய் யோசித்துப் பார்க்கவில்லை. ஒரு ராஜஸ்திரீ, அதுவுமெனது பட்டமஹிஷி, தன்னுடைய நிலைமை தனக்குத் தெரியாமல் கால் நடையாய் நகரத்துக்கு வெளியிற்சென்று அங்கே கணக்கில்லாத ஜனங்கள் கூடியிருக்கும் கிருஷ்ணன் கோயிலிற் பாடுகிறதென்ருலது நன்ருயிருக்கிறதா? நீரே யோசித்துப் பாரும்.

மங்—இதென்ன இப்படி யெண்ணங் கொண்டீர்கள்? அவளப்படி பக்தி செய்வதாலிந்த ஜகத்துக்குக் கெவ்வளவோ நன்மையுண்டாகிறதே. தங்கள் ராஜ்யத்திலிருக்கும்படியான சகல ஜனங்களுமவள் செய்யும் பக்தியால் தாங்களும் பக்திசெய்கிருர்கள். சகலரும் துர்நடத்தையை விட்டுச் சன்மார்க்கத்திற் பிரவிர்த்திக்கின்ருர்கள். நமது ராஜ்யத்திற்கு மீராபாய் வந்தபிறகு துஷ்டர்களெல்லோரும் நல்லவர்களாய் விட்டார்கள், திருடர் முதலியவர்கள் தங்கள் கெட்ட தொழிலைவிட்டு நல்லவழியிற் செல்லுகிருர்கள். அதைப்பற்றித் தான் கொஞ்சகாலத்துக்கு முன் தங்களோடுகூட நான் யோசித்துக்கொண்டிருந்தேன். ராஜ்யத்துக்கு மொருவிதக் குறைவுமில்லாமற் பயிர்களெல்லாம் நன்ருய்ச்செழிக்கின்றன. காலாகாலத்தில் மழையும் பெய்கிறது, நதிகளில் ஜலம் ஸம்ருத்தியாயோடிக்கொண்டிருக்கிறது. அப்படியிருக்கத் தாங்களிப்படி அபிப்பிராயங் கொண்டிருப்பதெனக்குச் சரியென்று தோன்றவில்லையே.

கும்—(தனக்குள்) இவர் சொல்வதெல்லா முண்மை தான். (வெளிப்படையாக) இதெல்லாம் யாரில்லையென்று சொன்னார்கள்? இதற்கு மிவள் பக்திக்குமென்ன சம்பந் தம்? இவள் பக்தியெல்லாம் வேஷமல்லவா? ஜனங்களி தைப் பற்றி நிந்திக்கிறதை நீரறிபவில்லை போலும்.

மந்—ஜனங்களா நிந்திக்கிறார்கள்? அப்படியொருக்கா துமில்லையே. நானறிந்த வரைக்கும் ஜனங்கள் மீராபா யைப் பற்றியு மவளைப் பத்தினியாயடைந்த தங்களுடைய பாக்யத்தைப் பற்றியும் நிரம்பவும் சிலாக்யமாயல்லவோ பேசுகிறார்கள்! தங்களுக்கு யாரிப்படிச் சொன்னது? எங் கே சென்றாலும் மீராபாயைக் குறித்துப் பேசும் ஸ்தோத்யங் கள் காதில் விழுகின்றனவே அல்லாமலவளைப் பற்றி நிந்த னையா யொருவார்த்தையாவது காணேமே.

கும்—அப்படியிருக்கும் பக்ஷத்தில் சுந்தரி யென்னி டம் பொய்யுரைத்திருப்பாளா? அவள் மீராவைப்பற்றி வீணாய்த் தூஷணை செய்யமாட்டாள்.

மந்—(தனக்குள்) ஓஹோ, சரிதான், சுந்தரியின் வலையிலகப்பட்டுக் கொண்டாரா இவர்? அதிலிருந்து தப் புவது வெகு கடினமாயிற்றே. தானொரு காரியம் செய்வ தென்று நிச்சயித்தாலதை யெப்படியாவது முடித்து விடும் படியான சாமர்த்திய முள்ளவளல்லவா? சுந்தரிக்குமுன் நானெவ்வளவு? அவள் செய்ய யத்தனித்திருக்கிற காரியத் தைத் தடுக்க என்னாலாகப் போகிறதா? இவளைப்பற்றி நா னேதாவது கெடுதலாயிவரிட முரைத்தாலி வருக்கென் மீது கடுங்கோபமுண்டாகு மென்பதிற் சந்தேகமில்லை. நா னென் செய்கிறது? நம்முடைய தர்மத்தை நாமெப்படியும் கைவிடலாகாது (வெளிப்படையாக) அரசே; சுந்தரி சொன்னதாகத் தாங்கள் சொன்னதெனக்குண்மையென்று தோன்றவில்லை.

கும்—என்னமந்திரீ, சுந்தரிபா பொய்யுரைத் திருப்பாளென்கிறீர்? நன்ருய் யோசித்துப் பேசும். வீணுயவளைப் பற்றிக் கண்டதெல்லா முரைக்கவேண்டாம்.

மங்—(தனக்குள்) சுந்தரியின் போதனையிவர் மனதில் பதிவாயூன்றி யிருக்கிறதென்று தோன்றுகிறது. இதை யெப்படி மாற்றுகிறது? (வெளிப்படையாக) மஹாராஜ் என்மீது கோபங்கொள்ளக்கூடாது. முன்னமேயே என்னுடைய அபிப்பிராயத்தை மறைக்காமல் வெளியிடவேண்டுமென்ருக்ஞாபித்திருக்கிறீர்கள். ஆகையால் நானென்னுடைய வாஸ்தவமான அபிப்பிராயத்தை வெளியிடலானேன். தங்களுக்கது அப்பிரியமாயிருக்கும் பக்ஷத்தில் நானென்றும் சொல்லவில்லை. ஆனல் நானெரு வார்த்தை மட்டு முரைக்கிறேன். அதை யென்மீது கோபங்கொள்ளாமல் கேட்டருளவேண்டும். மீராபாயைப் பற்றிக் கெடுதலாக நினைப்பது நியாயமல்ல வென்பதென்னுடைய அந்தரங்க அபிப்பிராயம். நான் போய் வருகிறேன். தங்கள் மனதுக்கு வருத்தமுண்டாகும்படி நானேதாவ துரைத்திருப்பேனுயின் அதற்காகத் தங்களை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கும்—சரி.

மங்—(மந்திரி போகிருர்.)

கும்—(தனக்குள்) மந்திரி அபிப்பிராயம் சரியென்று சொல்லுவாரென்று நான் நினைத்திருக்க, அவரிவ்விதமாகவல்லவோ அபிப்பிராயப்பட்டிருக்கிருர். ஆனல் நானேனிவருடைய அபிப்பிராயத்தை மதிக்கவேண்டும்? என்னுடைய ஸ்திதியிலிருந்து விஷயங்களைப்பார்த்தால் தான் என் அபிப்பிராயத்தினுண்மை விளங்கும். அப்படி யில்லாமல் வேருருவருக்கு நாம் படுகிற கஷ்டமெப்படித் தெரியும்? இவ

ரிப்படித் தான் சொல்லுவார்.—ஆனாலிவர் சாதாரணமான மந்திரியல்ல. இதுவரைக்குமிவர் சொன்னதாவது செய்ததாவது வீண்போனது கிடையாது. இவரபிப்பிராயம் தவறினதும் கிடையாது. அப்படியிருந்து மிந்த விஷயத்திலிவர் சொல்வது சரியென்றெனக்குத் தோன்றவில்லை. தவறுவது மனிதனுக்குச் சகஜம்தானே. எவ்வளவு சமர்த்தராயிருந்தாலு மிந்த விஷயத்திலிவர் கொண்டிருக்கும அபிப்பிராயம் தவறாயிருக்கக் கூடாதா? அப்படித் தானிருக்கவேண்டும். சுந்தரி சொன்னது பொய்யாயிருக்காது இப்படிப்பட்ட லோகாபவாதம் ஸ்திரீகள் காதிலெட்டுகிறதுபோல் புருஷர்கள் காதிற்படுமா? இவ்விஷயத்தினுண்மை மந்திரியை விட சுந்தரிக்குத் தான் நன்றாய்த் தெரியும். நானிப்போதென்ன செய்வது? அவளை நேரில் கண்டாலென் மனதிலிருப்பதை வெளியிட எனக்கு மனம் வருகிறதில்லை. ஆனாலவளிடத்திலென்ன கெட்ட குணமிருந்தாலுமவள் எனக்குச் செய்யவேண்டிய சுச்ரூஷைகளிலும் பணிவிடைகளிலு மொரு குறைவும் கிடையாது. என்னிடத்தில் வைத்திருக்கும் பிரியம் குறைவுபட வில்லையென்று நினைக்கும்படியாக நடந்து கொள்ளுகிறாள். இவளென்னிடத்தில் பிரியம் வைத்திருப்பதுண்மைதானா? எல்லாம் வேஷம்! எனக்கொன்றும் தோன்றவில்லை. மந்திரியோ இவ்விஷயத்தில் சரியான அபிப்பிராயம் கொள்ளவில்லை. சுந்தரியோடு கலந்து யோசித்தாலவளே தாவதொருவழி சொல்லுவாள். அது நல்லதாகவே இருக்கும். சேவகா

(சேவகன் வருகிறான்)

சேவ—சித்தம் மஹாராஜ்.

கும்—அந்தப் புரத்துக்குச் சென்று நான் சுந்தரி பாயை இங்கே பார்க்க விரும்புகிறதாகத் தெரியப்படுத்து.

(சேவகன் போகிறான்.)

(சுந்தரி வருகிறாள்)

சுந்—(தனக்குள்) நான், சுந்தரி, ஒருகாரியத்தைச் செய்ய யத்தனித்தால் அது வீணுய்ப் போகுமா? நான் செய்யும் படியான காரியங்கள் பலிக்காதிருப்பதை நான் கண்டு சகிப்பேனு? நானரசனுக்குச் சொன்னது நன்ருயவர் மனதிலூன்றியிருக்கிற தென்பதிற் சந்தேகமேயில்லை. என் போதனையைக் கேட்டபிறகு அவருக்கு மீராவிடத்திலிருக்கும் பிரியம் குறைவுபட்டேயிருக்கிறது. முன்போலவளிடத்தில் பேசுவதில்லை. அவளிருக்கு மிடத்துக்கும் போவதில்லை. நம்முடைய காரியம் சரிவரத் தாணுரம்பித்திருக்கிறது. கட்டாயமென் மனோரதம் கைகூடும். கைகூடும்படி செய்கிறவள் நானல்லவா? இதோடு விட்டேனு? இந்த மீராபாயை இவ்வாண்மனையினின்றும் நீக்கி இந்த ராணுவையுமவள் முகத்தில் விழிக்காதிருக்கும்படி செய்கிறேன். இப்போதிவரென்னை யழைத்திருப்பது மென்னுடைய நல்ல காலம் தான். இது என்னெண்ணத்தைப் பூர்த்திசெய்ய ஒரு நல்லதருணம். சேவகன் சொன்னதிலிருந்து மந்திரியோடு மீராபாய் விஷயத்தைப்பற்றிப் பேசினதாகவும் மந்திரி மீராபாய் பக்ஷம்பேச இவர் கோபங் கொண்டதாகவும் தெரியவருகிறது. மேலும் மந்திரியாண்மனையை விட்டு வெளிச்சென்றபோதவரென்னைப் பார்த்த பார்வையினுலுமவர் முகபாவத்தினுலுமிப்படி யேதாவது நடந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இந்த மந்திரிக்கு இந்தவிஷயத்திலென்மீது சந்தேக முண்டாயிருந்தாலுமிருக்கலாம். அவர் புத்திமான். சீக்கிரத்திலுண்மையை யறிந்து விடுவார்.—அதைப்பற்றி நான் கவனிப்பானேன்? மஹாராஜாவைச் சரியாயென் கைவசத்தில் வைத்துக் கொள்வேனுனல் நானென்றுக்கும் கவலைப்பட வேண்டியதில்லை. (அருகில் செல்லுகிருள்)

கும்—சுந்தரீ, வா இப்படியுட்கார்.

(இன்னும் வரும்.)

R. ஸ்ரீநிவாஸஐயர் M. A.

## சிறுவர்க்குரிய விஷயம்.

### ஆசாரம் அல்லது நன்னடக்கை.

---

𑌆𑌚𑌾𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃𑌸𑌂𑌤𑌶𑍍𑌚𑌾𑌚𑌾𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌃।
𑌆𑌗𑌮𑌾𑌨𑌾𑌂𑌹𑌿𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌆𑌚𑌾𑌰𑌃𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥
𑌆𑌚𑌾𑌰𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌾𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇।
𑌆𑌚𑌾𑌰𑌾𑌲𑍍𑌲𑌭𑌤𑍇𑌹𑍍𑌯𑌾𑌯𑍁𑌃 𑌆𑌚𑌾𑌰𑌾𑌲𑍍𑌲𑌭𑌤𑍇𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍॥
𑌆𑌚𑌾𑌰𑌾𑌤𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌚𑍇𑌹 𑌚

["ஆசாரத்தின் லக்ஷணம் தருமமேயாகும். நல்லோர்கள் ஆசாரத்தைக் கைக்கொள்கிறார்கள். எல்லா வித்தைகளிலும் ஆசாரமானது சிரேஷ்டமாயுள்ளது. ஆசாரத்தினின்றும் தர்மம் தழைக்கின்றது. தருமத்தால் ஆயுள்விருத்தியடைகின்றது. ஆசாரத்தால் ஒருவன் ஆயுளையும் ஐசுவர்த்தையும் கீர்த்தியையும் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் அடைகிறான்."—மஹாபாரதம்.]

ஸ்நேஹிதர்களே !

மேலே ஸம்ஸ்கிருதத்தி லெழுதியிருப்பது உங்களில் அநேகருக்குத் தெரியாதென்று நினைக்கிறேன். இனி, நீங்கள் பெரியவர்களாகும்போது ஒருவேளை ஸம்ஸ்கிருதம் படிக்கக் கற்றுக்கொள்வீர்கள். ஹிந்துக் குழந்தை ஒவ்வொருவருக்கும் ஸம்ஸ்கிருதபாஷை கொஞ்சமாவது அவசியம் தெரிந்திருக்கவேண்டும். ஏனெனில் நம்முடைய சிறந்த புஸ்தகங்களெல்லாம் அப்பாஷையிலல்லவோ எழுதப்பட்டிருக்கின்றன; முற்காலத்தில் நமது தேசத்திலிருந்த பரிசுத்தர்களான ரிஷிகள் அனைவரும் ஸம்ஸ்கிருத பாஷையையே பேசிவந்தார்கள். நீங்கள் மேலேயுள்ள ஸம்ஸ்கிருத சுலோகங்களை எளிதிலுணர்ந்துகொள்ளுமாறு அவற்றின் தமிழர்த்தத்தையும் அவற்றின்கீழ் எழுதியிருக்கிறேன். அதையே பின்னும் விவரிப்பேன்.

கடவுளைச் சேவிக்கவேண்டுமானால், நமது நடத்தை நன்றாகவிருக்கவேண்டும். நன்னடக்கை எல்லாவற்றையும் விட மேலானது. நன்னடக்கைதான் மதம், தர்மம் என்றும் கூறப்படுகின்றது. நமது ஆயுள்காலத்தை ஒழுங்காகவும், அழகுறவும் கழிக்குமாறு, தருமத்தை நாடவேண்டும். நன்னடக்கையே, நாம் சுகமாய் வாழ்ந்து ஆனந்தப்படுவதற்கு ஏற்றதாகும். நன்னடக்கையாலேயே இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் நற்பலன்களை நாம் இலகுவாய் அடையலாம். நன்னடக்கை என்பது ஸம்ஸ்கிருதத்தில் ஸதாசாரம் என்று சொல்லப்படும்.

இந்த ஸதாசாரத்தைப் பற்றியே நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். சில விஷயங்களில் நீங்கள் சந்தோஷமுள்ளவர்களாகவும் வேறு சில விஷயங்களில் துக்கமுள்ளவர்களாகவும் இருக்கிறீர்கள். சிலவேளைகளில் நீங்கள் கோபங்கொள்கிறீர்கள். சிலவேளைகளில் பெரியோர்கள் சொற்படி செய்கிறீர்களில்லை. ஆனால் நீங்களெல்லோரும் சீக்கிரம் நல்லவர்களாக வேண்டுமென்று விரும்புவதும் எனக்கு நன்றாய்த்தெரியும். ஒருசமயம் நீங்கள் கோபித்துக் கொண்டாலும் மறுசமயம் "ஏன் இவ்விதங்கோபங்கொண்டேன்? நான் ஏன் சாந்தமாய் நடந்திருக்கக்கூடாது? நான் ஏன் கீழ்ப்படிந்து நடக்கவில்லை? இனியாவது சாந்தமாயும், கீழ்ப்படிந்தும் நடப்பேன்" என்று உங்களுக்குள்ளே ஆலோசித்துக்கொள்கிறீர்கள்.

இனி, மாதந்தோறும் நன்னடக்கையைப் பற்றிய சில கதைகளை உங்களுக்கெழுதிவருவேன். நீங்கள் இக்கதைகளை வாசிப்பீர்களாயின், இலகுவாய் நல்லவர்களாயிருக்கக் கற்றுக்கொள்வீர்கள். நீங்கள் செய்யவேண்டியதென்னவென்று அக்கதைகளிலிருந்து இலகுவில் கற்றுக்கொள்வீர்கள். அக்கதைகளெல்லாம் நமது புராணங்களில் இருக்கின்றன. அவை கடினமான வார்த்தைகளாலெழுதப்பட்டு, மிகப் பெரிதாயிருக்கின்றன. ஆகையால் நீங்கள் வாசிப்பதற்குச் சிரமமாயிருக்கும். உங்களுக்கு எளிதில் விளங்குமாறு சிறு

சிறுவார்த்தைகளில் சுருக்கி எழுதிவருவேன். நீங்கள் அக்கதைகளைத் திரும்பத் திரும்பவாசிக்கலாம்.

முற்காலத்திய ஸ்திரீ, புருஷர்களில் மிகச்சிரேஷ்டர்கள் (நல்லவர்கள்) எவ்விதம் நடந்துவந்தார்கள் என்பதை அக்கதைகள் விவரிக்கின்றன. முற்காலத்தில் சிறுவர்களும் எவ்விதம் எல்லோரிடத்தும் சாந்தமாய் நடந்துவந்தார்கள் என்பதையும், ஈசுவரனிடத்திலும், கிருஷ்ணபகவானிடத்திலும், தேவர்களிடத்திலும் எவ்விதம் அன்புசெலுத்தி, அவர்களுடைய கட்டளைப்படி நடந்துவந்தார்கள் என்பதையும் அக்கதைகள் விளக்குகின்றன. நாம் அவர்களுடைய ஸதாசாரத்தை (நன்னடக்கையை)ப்பற்றிப் படித்து நாமும் எப்படி நல்லவர்களாகலாம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

பிரகாசமான சூரியனும், பார்வைக்குக் குளிர்ச்சியான மரங்களும், கனிந்தபழங்களும், நமக்கு வேண்டிய தானியங்களும், நமக்காக பாடுபட்டு உழைக்கின்ற மிருகங்களும் உருசியானபாலைக்கொடுக்கும்பசுக்களும் நிறைந்துள்ள இப்பூலோகத்தின் அழகுதான் என்ன? இவைகளையெல்லாம் தேவர்களல்லவோ உண்டாக்கி வைத்திருக்கின்றனர்? இத்தனை பொருள்களையும் நமக்கு அவர்கள் கொடுக்கிறார்களே; நாம் அவர்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டாமா? அவர்களிடத்தி லில்லாத பொருள் கிடையாதே. ஆயினும் நாம் அவர்கட்குக் கொடுக்கக்கூடியவையும் சில உண்டு. அவை, நம்முடைய நல்லெண்ணங்களும், நல்லசொற்களும், நற்செய்கைகளுமேயாம்.

இவைகளைத் தான் நாம் நற்குணங்களென்று சொல்கிறோம். இந் நற்குணங்களால் நமக்கும் சந்தோஷம் ஏற்படுகின்றது. பிறர்க்கும் சந்தோஷம் ஏற்படுகின்றது.

நற்செயல்களில் அநேக விதங்களுண்டு. அவை என்னவென்றால்;—

1. உங்களைக் காட்டிலும் மெலிந்தவர்களாகவும், சிறியவர்களாகவும் இருப்போர்க்குச் செய்யத்தக்க உதவிகள், அதாவது, உங்களவ்வளவு வயதாகாத சிறுவர்கள் அல்லது ஸ்நேஹிதர்களுக்குச் செய்யவேண்டிய நற்செயல்கள் பல உண்டு. உங்களுடைய தாயார் தகப்பனார் குருக்கள் (உபாத்தியாயர்கள், பெரியோர்கள். வயதுசென்றவர்கள்) ராஜா, இவர்களிடத்திலெல்லாம் நன்னடக்கையையே நீங்கள் அநுசரிக்கவேண்டும்.

2. நாமே விருத்தியடையுமாறுசில ஸதாசாரங்களைப் பின்பற்றக் கடவோம். முன்னிலுமதிகமாக உண்மையுள்ளவனாகவும், கீழ்ப்படிதலுள்ளவனாகவும், அதிக சாந்தமாகவும்,அதிக பரோபகார புத்தியுடையவனாகவும் வேண்டுமல்லவா? யாதொன்றுக்கும் தொந்தரவு செய்யாமலும், பொய்சொல்லாமலும், நாம் நடக்கலாமன்றோ! இவைகள் நமக்காகவே செய்யவேண்டிய நற்செயல்கள்.

3. நாம் ஈசுவரனின் முன்பாகவும் நன்னடக்கையோடிருக்கவேண்டும். அஃதென்னவென்றால் நாம் செய்யும்எல்லாக்கார்யங்களிலும் ஈசுவரனையே நினைக்கவேண்டும். விளையாட்டாயினும் சரி, வேலையானாலும் சரி ஈசுவரனையே நினைக்கவேண்டும். அவருக்குத் தொண்டு புரியவேண்டும். அவருக்குச் சேவகனாக உழைக்கவேண்டும். அவர் வேலையில் நாமும் சேர்ந்து உழைக்கவேண்டும். உங்களுக்கு இனி தக்க வயதுவரும்போது,பகவத்கீதை என்னும் நேர்த்தியான புத்தகமொன்று படிப்பீர்கள். அதில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்வதென்னவென்றால் "நாம் எதைச்செய்தாலும்,நாம் எதைச்சாப்பிட்டாலும் நாம்எதைத் தேவர்களுக்குக் கொடுத்தாலும், எதைப் பிறர்க்குக்கொடுத்தாலும் இன்னும் எதெதைப் பிறர் பொருட்டுச் செய்வதற்கு நமது சுயநலத்தையுங்கூட விடுகிறோமோ அதையதையெல்லாம்ஈசுவரனின்பொருட்டுச்செய்வதாக நினை" என்பதேயாம். இது தான் ஈசுவர ஆராதனை. இதற்கே பக்தி யென்று பெயர். இவ்வித நற்செய்கைகளைப்பற்றிய அநேக கதைகளை நாம்

இனி படிப்போம். பலவீனர்களுக்கும் உதவியற்றவர்களுக்கும் நாம் செய்யக்கூடிய நற்செய்கைகளையும், எல்லாமனிதர்களுக்கும் எல்லாஜந்துக்களுக்கும் செய்யக்கூடிய நற்செய்கைகளையும்பற்றி அக்கதைகள் விவரிக்கின்றன. புருஷர்களானாலும் ஸ்திரீகளானாலும், சிறுகுழந்தைகளானாலும் மிருகங்களானாலும் பூச்சிகளானாலுங்கூட எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் நாம் உபகரிக்கவேண்டும்.

எல்லாவற்றையும் நாம் நேசித்துவருவது மிக நல்லதாகும். ஏதாவதொன்று தொந்தரவு படும்போது இரக்கப்படுவதும் நல்லதே. எதையும் ஒருபொழுதும் நாம் தொந்தரவுக்குட்படுத்தலாகாது. இவ்விதம் அன்புபாராட்டும் நற்செய்கைதான் தயை, இரக்கம் என்று சொல்லப்படுகிறது. ஏதாவது பிராணி தொந்தரவுக்குட்பட்டு வருந்துவதைப்பார்த்து நீங்கள் அதற்கு உதவிசெய்ய முயலுவீர்களானால், நீங்கள் இரக்கமுடையவர்கள்தான் (தயையுடையவர்கள்)ஒருசிறுகுழந்தை ஏதாவதுஒருபிராணியை எவ்வித உபத்ரவத்தினின்றாவது நீக்கினால்,அக்குழந்தை தயைநிறைந்த குழந்தைஎன்று சொல்லப்படும். சிறியவர்களானாலும், பெரியவர்களானாலும்,புருஷர்களானாலும், ஸ்திரீகளானாலும் துன்பப்படுகிறவர்களுக்கு உதவிபுரிந்து, அவர்களிடம் அன்பு ஆதரவோடு இருப்பார்களானால், அவர்களெல்லோரும் இரக்கமுடையவர்கள் எனப்படுவார்கள். வியாதிஸ்தர்களுக்கு மருந்து முதலியவை கொடுத்துதவுகிறபோதும், பலவீனர்களுக்கு உபகரிக்கும்போதும், பசித்தவர்களுக்கு அன்னம் கொடுக்கும்போதும் இரக்கம் என்னும் நற்குணத்தை வெளிக்காட்டுகிறோம்.

> "ஆதரவான நற் செய்கைகளாலும்
> அனபான நல்ல வார்த்தைகளாலும்
> நமது பூலோகமும் மேலுலக
> மான ஸ்வர்க்கலோகமாகும்.

வஸந்தானந்தன்.

---

* இது இந்திய வாலிபர்களுக்காக காசி ஸெண்ட்ரல் ஹிந்து கலாசாலை ஸ்தாபகர்களால் எழுதப்பட்ட ஆங்கில வாசகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

310

## கல்விக்கைங்கர்யம். *

### உபாத்தியாயர்.

---

என்னைச் சுற்றிலுமுள்ளவர்களுக்கு எவ்விதம் நான் சிறந்த உபகாரியாயிருக்கலாமென்றுதெரிந்துகொள்ள என் குருநாதன் என்னைப் பயிற்றுவிக்குங்காலத்தில், எனக்குச் சொன்ன உபதேச மொழிகளை "சற்குரு சரணங்களில்" என்னும் புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். குருநாதனுடைய மொழிகள் எவ்வளவு உற்சாகத்தைக் கொடுக்கின்றனவென்பதையும், அம்மொழிகளைப் படித்துணர்ந்தவர்கள் மற்றவர்களுக்குதவிபுரியப் பழகுவதற்கு எவ்வளவு ஆவலுள்ளவர்களாயிருக்கின்றனர் என்பதையும் அப்புத்தகத்தை வாசித்தவர்களொவ்வொருவரும் அறிவார்கள். நான் யாரிடத்தில் பயிற்சியை எதிர்பார்த்தேனோ அவர்கள் என்விஷயத்தில் அன்புடன் எடுத்துக்கொண்ட கவலையால் எவ்வளவு ஓத்தாசையை அடைந்திருக்கிறேனென்பதை நன்குயறிவேன். மேலும் அவ்விதம் நான் அவர்களிடம் அடைந்த உதவிகளைப் பிறருக்குச் செய்ய ஆவலுள்ளவனாயிருக்கிறேன்.

குருநாதனுடைய உபதேசமொழிகளை எல்லாவிஷயங்களிலும் உபயோகப்படுத்தலாமென்று எனக்குத் தோன்றுகிறது. தீக்ஷையைப் பெறும்படி செய்விக்கிறதாகிய ஞானமார்க்கத்தில் உறுதியாகச் செல்ல முயலுகிறவர்களுக்கு

---

* ஆத்தங்குடி சுப்பராமையர் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

மட்டுமே இவைகள் பிரயோஜனமுள்ளவைகளென்று நினைக்கக்கூடாது; ஆனால் உலகத்தில் பிரவிர்த்தி மார்க்கத்திலிருந்துகொண்டு தமது வேலைகளை இன்னமும் செய்துவரும்போழ்தே தங்களுக்கேற்பட்ட கடமைகளைப் பலாபேக்ஷையின்றியும், ஊக்கத்துடனும், எப்படிச் செய்யலாமென்று கவலைப்படுகிறவர்களுக்கும் இவைகள் பிரயோஜனப்படும். கௌரவமாக மதிக்கப்படும் வேலைகளில் உபாத்திமைத் தொழிலும் ஒன்றாகவிருக்கிறது. குருநாதனுடைய மொழிகள் அதை எவ்விதம் விளக்கிக்காட்டுகின்றன வென்பதைக் கவனிப்போம்.

"சற்குரு சரணங்களில்" என்னும் புத்தகத்திற் சொல்லப்பட்ட நான்கு சாதனங்களையும் எடுத்துக் கொண்டு ஆசிரியன், மாணக்கன் இவர்களில் ஒவ்வொருவரிடத்திலும் ஏற்படவேண்டிய ஒழுக்கங்களையும், அவர்களிருவருக்குமிருக்கவேண்டிய பரஸ்பர சம்பந்தங்களையும் அச்சாதனங்களொவ்வொன்றும் எவ்விதமாக விளக்குமென்று காண்பிக்கமுயலுகிறேன்.

கல்வி விஷயத்தில் முக்கிய சாதனம் அன்பாகையால் அதை முதலில் எடுத்துக்கொள்ளுகிறேன்.

கல்வி கற்பிக்கும் தொழிலானது, அதிக சாஸ்திரப் பயிற்சியுள்ளமற்றத் தொழில்களைப்போல் அவ்வளவு உயர்வாகத் தற்காலத்தில், நினைக்கப்படாமலிருப்பது விசனத்தைத் தரத்தக்கதே. எவரும் உபாத்தியாயராயிருக்கத் தகுந்தவரென நினைக்கப்படுவதால், உபாத்தியாயருக்கு மரியாதையே யில்லாமற்போய்விட்டது. ஆகையால் அதி

சப் புத்திசாலியாயிருக்கும் பையன்கள் இத்தொழிலில் நோக்கங்கொள்ளுகிறதில்லை. ஆனால் கல்விகற்பிக்கும் வேலை யானது உண்மையில் அதிகப் புனிதமுள்ளதும், தேசத்தி லுள்ள ஜனங்களுக்கு அத்யாவசியமானதும் ஆகும். ஏனெனில் அதுதான் இனி வருங்காலங்களில் தேச சுதந் தரர்களாகப்போகிற தற்காலச் சிறுவர்களுக்கும் சிறுமிக ளுக்கும், நற்குணங்களை உண்டாக்குகிறது. ஆதிகாலத்தில் கல்வி கற்பிக்கும் தொழில் அதிகப் பரிசுத்தமானதெனக் கருதப்பட்டது. தேவாராதனையைக்கைக் கொண்டவர்கள் மட்டுமே கல்வி கற்பிக்கப்பாத்திரர்களென நினைத்து அவர் களைக்கொண்டு கல்வியைக் கற்பித்துவந்தார்கள். ஆலயங் களின் ஓர் பாகமே பள்ளிக்கூடங்களாக ஏற்பட்டிருந்தன. இந்தியாவில் இவ்விதம் கல்விகற்பிக்கும் ஆசிரியரிடம் ஜனங்களுக்கு அதிக நம்பிக்கையுண்டு. பெற்றோர்கள் தம் குழந்தைகளை அநேகவருஷகாலம்வரை அவர்களிடமே பூராவாக ஒப்புவித்து விடுவதும், அவ்விதம் ஒப்புவிக்கப் பட்ட பையன்களும் குருவும் ஒரே குடும்பமாக வசித்து வருவதும், வழக்கம். சந்தோஷகரமான இவ்வித சம்பந்த மானது, திரும்பவும் முன்னிருந்த நிலைமைக்கே கொண்டு வரப்படவேண்டுமென்பதற்காக, ஒரு ஆசிரியனிடமிருக்க வேண்டிய முக்கியமான குணங்களில், அன்பை முதலா வதாக நான் கருதுகிறேன். நாமெல்லோரும் எதிர்பார்க்கிற படி இவ்விந்தியாவானது மறுபடியும் ஒரு சிறந்த தேசமாக வேண்டுமானால், இச்சந்தோஷகரமான பழய சம்பந்தங் கள் திரும்பவும் ஆசரணைக்குக்கொண்டுவரப்படவேண்டும்.

ஜே. கிருஷ்ணமூர்த்தி.

# தியானக்கிரம விஷயம்.

## அக்டோபர் மாசம்.

---

மாசாந்தர அப்பியாசம்:—செய்கை:—உன் முன்னிலையில் நீ ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய முக்கிய தர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்வதேயாம்.

### வாரஅப்பியாசம்.

1-வது வாரம்:—உலகம் நல்லதென்று சொல்லும் ஒரு பெருங்காரியத்தைவிட, குருநாதனது பிரவர்த்திக்கு நேரே அநுகூலமாயிருக்கும் ஒரு சிறியகாரியம் மிகவும் மேன்மையான தென்றறி.

2-வது வாரம்:—நியாயத்தைக் கைக்கொள்வதற்கே நீ நியாயமாய் நடக்கவேண்டும்; அதினால் வரும் வெகுமானத்தை யுத்தேசித்தல்ல; நீ வேலை செய்ய வேண்டுவது வேலையை உத்தேசித்தே யல்லாது, அதன் பலனையடைய உத்தேசித்தல்ல.

3-வது வாரம்:—சோம்பல் தவிர்க்கப்படவேண்டும். நற்காரியத்தில் சுறுசுறுப்புடன் உழைக்கவேண்டும்.

விவேகியானவன் தன் சரீரத்தைப் பார்த்து "நற்பணி செய்ய நீ தடைசெய்யாதே," என்று மறுமொழி சொல்கிறான்.

4-வது வாரம்:—குருநாதனுக்கு நீ சொந்தமாக வேண்டுவாயாகில், சாதாரணமான காரியங்களை மற்றவர்களைவிட நீ மேல்ாகவே செய்யவேண்டும், சிரத்தைக் குறைவாய்ச் செய்பலாகாது. ஏனென்றால் அவைகளையுங்கூட நீ குருநாதனுடைய நிமித்தமாகவே செய்யவேண்டும்.

ஸ்வலாப நோக்கமற்ற எந்த பரோபகாரச் செயலும் குருநாதனுடையதே; அதை நீ அவர் நிமித்தம் செய்ய வேண்டும்.

5-வது வாரம்:—எந்தக் காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும், அதிலேயே உன் மனதை நிறுத்து. அப்பொழுது அக்காரியம் நன்றாய்ச் செய்யப்பட்டு முடியும்.

## தினசரி அப்பியாசம்.

1. உலகம் நல்லதென்று சொல்லும் ஒரு பெருங்காரியத்தைவிட குருநாதனது பிரவிர்த்திக்கு நேரே அநுகூலமாயிருக்கும் ஒரு சிறிய காரியம் மிகவும் மேன்மையானதென்றறிக.

2. உன் முன்னிலையில் நீ ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய முக்கிய தர்மம் குருநாதனுடைய வேலையைச் செய்தலேயாம்.

3. குருநாதனது உபதேசங்களில் அவர் சொல்லும் ஒவ்வொரு குறிப்பையும் ஒவ்வொரு வார்த்தையையும் கிரகித்து, நீ அதன்படியே நடக்கவேண்டும்.

4. நீதியெதுவோ அது உன்னால் எவ்வகையிலும் செய்யப்படவேண்டும்; அநீதி எவ்வகையிலும் விடப்படவேண்டும்; இவ்விஷயத்தில், அறியாதவர்களுடைய அபிப்பிராயம் கவனிக்கத் தக்கதல்ல.

5. செய்யத் தகுதியுள்ளது இது என்பதைத் தெரிந்துகொள்ள முயலு. நீ கவனிக்கவேண்டியது, காரியம் பெரிது, சிறிது என்பதல்ல.

6. ஏழைகளுக்கு அன்னமிடுவது மேன்மை தங்கிய உபகாரமாகும். அது நற்காரியந்தான். ஆனால் அவர்கள் சரீரங்களைப் போஷிப்பதைவிட அவர்களுடைய ஜீவன்

களை விருத்திக்குக் கொண்டுவருவது மிக்க உபயோகமுள்ள மேலானகாரியம். பணமுள்ள எவனும் சரீரத்திற்கு உண வளிக்கக்கூடும். ஆனால் ஞானமுள்ளவர்கள்தான் ஜீவனைப் போஷிக்கத் திராணியுள்ளவர்கள்.

7. ஈசுவரன் ஒருவர் தான் பெரியவர். அவரால் தான் எல்லா நற்காரியங்களும் செய்யப்படுகின்றன, என்று விவேகியறிகிறான்.

8. நியாயத்தை உத்தேசித்தே நீ நியாயமாய் நடக்க வேண்டும். அதினால் வரும் வெகுமானத்தை யுத்தேசித் தல்ல.

9. நீ வேலை செய்யவேண்டுவது வேலையை உத்தேசி த்தேயல்லாது அதன் பலனைப் பார்க்க உத்தேசித்தல்ல.

10. உலகத்தின்கண் உனக்கு அன்பிருக்குங்காரணத் தால் உன்னை நீ அதற்கே அர்ப்பணம் செய்துகொண்டு உலக கைங்கரியங்களில் நீ முயலவேண்டும்.

11. ஒருதரம் ஒரு மனிதன் [ஈசுவரன் மனிதர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் விகாஸ முறையை] உண்மையாக அறிந்துகொண்டால், அது மிகவும் சிறப்புற்று மகிமை தங்கி நிற்பதால், அவன் அதற்கு இணங்க நடவாமலும் அதனுடன் ஒருமைப்படாமலும் இருக்க முடியாது. ஆகை யால் அவன் அறிவுபெற்று ஈசுவரன் வழியே நின்று, நன் மை புரிந்து தீமையை விலக்கி, விகாஸ முறைக்கு இணங்க நடந்து, ஸ்வலாப நோக்கத்தை விடுகிறான்.

12. அநேக ஜனங்களுக்குத் தங்கள் சொந்தக் காரிய ங்களை மாத்திரம் கவனித்து நடக்கப் பயிலுவது உலகில்

மிகவும் கஷ்டமான விஷயமாயிருக்கின்றது. அதனால் இதைத்தான் நீ நன்றாய்க் கவனித்து நடக்கவேண்டும்.

13. அடியில் கண்ட விதமாய் நீ உன்னைச் சற்று யோசனையின்மையால் கொடுஞ் செயல்களுக்குட்படுத்திக்கொள்ளாது, ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

1. கவனியாது சொல்லும் வார்த்தை

2. வேலைக்காரனுக்குச் சம்பளம் கொடுப்பதில் இருபணத்தனம்.

3. தன்னுடைய சொற்ப தொந்திரவை யுத்தேசித்து தன்னுடைய வேலையாட்களுக்குக் குறித்த தினத்தில் சம்பளங்கொடுக்கிறதில்லை. அவர்களுக்குத் தன்னாலுண்டாகும் கஷ்டங்களையும் நினைக்கிறதில்லை.

14. வேண்டுமென்றே வேறு ஒரு ஜீவ ஜந்துவுக்கு உபத்திரவஞ் செய்வது கருதிச் செய்யும் கொடுஞ்செயலாம். இது மனுஷப்பிவர்த்தியல்ல. அசுரச் செய்கை, எல்லாப்பாபங்களிலும் இது பெரிது! உடற்கூறு சாஸ்திர பரீக்ஷகர்கள் இதைச் செய்கிறார்கள். அநேக பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் இதை வழக்கமாய்ச் செய்கிறார்கள். வெளியிற்சென்று, வேட்டை விளையாட்டென்று சொல்லி, புத்திபூர்வமாய், ஈசுவர சிருஷ்டிகளாகிய ஜீவஜந்துக்களைக் கொல்பவர்களின் கதியும்; கொடுமை செய்பவர்களுடைய கதியும் ஒன்றே. ஒருவனை மந வருத்தமுறச் செய்யும்படி பேசுவதும் இந்தக் குற்றத்திற் சம்பந்தப்பட்டதுதான்.

15. சோம்பலை நீக்கிவிடு. நற்காரியத்தில் இடைவிடாது சுறுசுறுப்பாயிருக்கவேண்டும்,

16. பிறர்க்குதவி செய்யச் சமயம் நேரிட்டால் "இது என்ன உபத்திரவம், வேறு யாராவது செய்யட்டும்" என்று சரீரம் பலவிதமாய் நினைக்கின்றது. நற்பணி செய்ய நீ தடை புரியாதே என்று விவேகியானவன் சரீரத்தைப்பார்த்துக் கண்டிக்கிறான்.

17. சரீரம் ஒரு மிருகம் போன்றது. நீ சவாரி செய்யும் குதிரை ஆதலின், அதை நன்கு கவனித்து நடத்தி, மிதமிஞ்சியவேலைக்குட்படுத்தாது, சுசியான அன்னபானாதிகளால் சரிவரப்போஷித்து கொஞ்சமும் அழுக்கற்ற ஸ்திதியில் அதை எப்போதும் நீ வைக்கவேண்டும்.

18. முற்றிலும் சுசியாயும், ஆரோக்கியமாயும் சரீரமிருந்தால்தான், மேன்மார்க்கத்துக்குரிய, கஷ்டநிஷ்டூரங்களுக்கிணங்க நடக்கவும், அம்மார்க்கத்திற்குரிய இடையறாத உழைப்பைச் சகிக்கவும் முடியும்.

19. ஆகையால் சரீரம் உனக்கு உட்பட்டிருக்கவேண்டுமேயல்லாது. அதன் வசம் நீ யிருப்பது கூடாது.

20. ஸ்வதர்மம் தான் உனக்கு பெரிது. உன் சொந்தக்கடமையையே நீ முதன்மையாகச் செய்யவேண்டும் மற்றவர் உன்னை வேண்டினால், அவருக்கு நீ உதவிசெய்யும் பொருட்டு, அவரது பிரவிர்த்தியில் உழைக்கலாம்.

21. ஒவ்வொரு மனிதனையும் அவன் வழியிலேயே அவன் சொந்த வேலையைச் செய்யும்படி விடு: அவசியம் நேரிடும் சமயத்தில், நீ உதவி செய்ய எப்பொழுதும் தயாராக இரு. ஒரு பொழுதும் இதாருடைய காரியங்களில் தலையிடாதே.

22. குருநாதனுக்கு நீ சொந்தமாக வேண்டுவாயானால் ஸாதாரணமான காரியங்களை மற்றவர்களைவிட மேலாகவே செய்யவேண்டும். சிரத்தைக் குறைவாய்ச் செய்யலாகாது. ஏனென்றால், அவைகளையுங்கூட நீ குருநாதனின் நிமித்தமே செய்யவேண்டும். ஸ்வலாப நோக்கமற்ற எந்த பரோபகார வேலையும் குருநாதனுடையதே. அதை நீ அவர் நிமித்தம் செய்யவேண்டும்.

23. உயர்வான வேலையை நீ செய்ய முயலுகிற காரணத்தினாலேயே, உனது சாதாரண கடமைகளை நீ மறக்கக் கூடாது! இவைகள் செய்யப்படாவிட்டால், வேறு கைங்கரியத்துக்கு நீ சுதந்தரனல்லன்.

24. புதிதாய் நீ ஒரு பிரபஞ்சப் பிரவர்த்தியையும் ஆரம்பிக்க ஏற்கவேண்டாம். நீ ஏற்றுக்கொண்டு முடிக்கக் கடன் பட்டிருக்கிற நியாயமான கடமைகளை நீ பூர்ணமாய் நிறைவேற்றவேண்டும். பிறர் பலர் உன்னைப் பலவிதமாய் அவரவர் போக்குப்படி ஏவும் வேலைகளையெல்லாம் இரண்டாம் பக்ஷமாகவே கருதுவாயாக.

25. எதைக் குருநாதன் செய்யமாட்டாரென்று நினைக்கிறாயோ அதை நீ ஒருபொழுதும் செய்யக்கூடாது.

26. கல்வியைப் பொறுமையுடன் அடை, இதர மனிதர்கள் உன்னை விவேகியென்று நினைப்பதற்காகவல்ல; விவேகியென்று நீயே அறிந்து ஆனந்தப்படுவதற்காகவுமல்ல. விவேகிதான் ஆராய்ந்து விவேகத்துடன் உதவி புரியக்கூடும். நீ எவ்வளவு உதவிபுரிய விரும்பினும், விவேகக்குறைவால் உனது செய்கைகளில் நன்மை குறைந்து தீமை மேலிடும்.

27. செய்கையில் உண்மையாயிரு; வேஷம் போடாதே; சுத்தமான கண்ணாடியின் வழியே சூரியப் பிரகாசம் துலங்குவதுபோல் சுத்த சத்தியப் பிரகாசம் உன் வழியே பிரதி பலிக்கவேண்டும் வேஷ அபிநயமெல்லாம் இதற்கு விரோதம்.

28. இப்பொழுது நீ செய்யும் செய்கைகளைக் கவனி இவைகள் உனது அடுத்த ஜன்மத்திற் பலனைக் கொடுக்கக் கூடியவைகள்; அதை நீ மாற்ற முடியும்.

29. எந்தக்காரியத்தை நீ செய்துகொண்டிருந்தாலும் அதிலேயே உன் மனதை நிறுத்து. அப்பொழுது அக்காரியம் நன்றாய்ச் செய்யப்பட்டு முடியும்.

30. நீ எவ்வற்ப வேலையைச் செய்யும் பொழுதும் அதில் உனது கவனம் முழுமையும் செலுத்திச் செய்; எவ்வளவு நன்றாய்ச் செய்ய உன்னால் முடியுமோ அவ்வளவு நன்றாய் அது செய்யப்படவேண்டும்.

31. குருநாதன் பார்க்க உடனே வருவதாக நீ அறிந்தால், ஒரு வேலையை நீ எப்படிச் செய்வாயென்பதை ஆலோசி; நீ செய்யும் எல்லா வேலைகளையும், இவ்விதம் ஆலோசித்துச் செய்யவேண்டும்.

320

## தியானக்கிரம விஷயம்.

### நவம்பர் மாசம்.

---

மாதாந்திரப்பியாசம்:—பிறருக்கு உதவிசெய்.

வாரப்பியாசம்.

1-வது வாரம்:—சாரமில்லாத விஷயங்களில் எப்பொழுதும் நீ தலையிட்டுக்கொள்ளாதே. வீண் விவகாரம் செய்யாமல் பிறருக்கு இணங்கு. ஏனென்றால் நீ எப்பொழுதும் சாந்தமுள்ளவனாகவும், பக்ஷமுள்ளவனாகவும், விவேகமுள்ளவனாகவும், இணக்கமுள்ளவனாகவுமிருக்கவேண்டும் நீ ஸ்வேச்சையாயிருக்க விரும்புகிறபடி மற்றவர்களுக்கும் இடங்கொடு.

2-வது வாரம்:—உனக்கு தெரிந்த விஷயத்தை மற்றவர்கள் அறியும்படி செய்வது உனது கடமை.

3-வது வாரம்:—நாளடைவில், தன்னயம் சிறிதும் கருதாமல், பிறருக்கு உதவிசெய்யவேண்டும் என்கிற எண்ணம் உன்னிடத்தில் பூர்த்தியா யேற்படும்.

4-வது வாரம்:—பரோபகாரம் செய்யவேண்டுமானால் எல்லோரையும் நீ அறிந்துகொள்ளவேண்டும்,

5-வது வாரம்:—உன் சகோதரனிடத்தில் உள்ள ஈசுவராம்சத்தை எவ்விதம் வெளிப்படுத்தக்கூடும் என்பதை நீ கற்றுக்கொள். அவனிடம் இருக்கும் ஈசுவராம்சத்தை அவன் தெரிந்துகொள்ள எவ்விதம் செய்யவேண்டுமென்பதை நீ அறிந்துகொள். அப்படியானால், உன் சகோதரன் துன்மார்க்கத்தில் செல்லாதபடி நீ அவனைத் தப்புவிப்பாய்.

(இன்னும் வரும்.)

கே. யஸ். இராமசந்திர ஐயர்.

இச்சபையோர் தத்துவ தரிசநம் ஒன்றையே நோக்கி, ஆத்மக்ஞான விஷயமாய் உழைத்து, நாஸ்திகத்தைத் தொலைத்து, மத விஷயங்களில் அறிவுடன் கலந்த சிரத்தையை விளைத்து, மநுஷ்ய வர்க்கத்திற்குபகரிப்பவராவர். இதிற் சேர விரும்புவோர் எம்மதஸ்தராயும், அல்லது ஓர் மதத்தையும தழுவாமலுமிருக்கலாம். இம்மூன்று நோக்கங்களே இச்சபைக்குப் பிரதானம். பிறமதங்களையும் பாரபக்ஷமின்றி ஆராய்வதால், மதத்துவேஷம் நீங்கியவர்களாயும், அபிப்ராய பேதங்களால் ஒற்றுமை குன்றாதவர்களாயும் இச்சபையோர் உளர். வெறும் நம்பிக்கையால் மட்டுமல்லாமல், தத்துவத்தை நேருக்கு நேராய் அறியவேண்டிய அவாவினாலேயே, இச்சங்கத்தினர் அனைவரும் ஒரு மனப்பட்டிருக்கின்றனர். தேர்ந்த படிப்பினாலும் ஆழ்ந்த சிந்தனையாலும், சுத்த சர்யையாலும், உயர் நோக்கங்களிற் கொள்ளும் ஸ்திர பக்தியாலுமே ஒருவன் தத்வத்தையடையக்கூடும். தீவ்ரமான உழைப்பின் பயனான அநுபவத்தால் தான் ஒருவனுக்கு உண்மை கைகூடும். நிர்ப்பந்தத்தால் சட்டுப்படுத்தும் கொள்கை எதுவும் உண்மையாகாது, அறிவில்லாமல் நம்பலாகாது. எல்லோரிடத்தும் பொறுமையும், பொறுமையற்றவர்களிடமுங்கூட நமது கடமையாகக்கொண்டு, அன்பையே காட்டுவதும், அறிவிலிகளை நிந்தித்து துவேஷியாமல், அவர்களுக்கு போதிப்பதுமே சிலாக்கியமெனக் கொள்வதோடும், ஒவ்வொரு மதமும் பிரஹ்மக்ஞானத்தின் ஓர் அம்சமென்றும், அதனாலதை அசட்டை செய்யாதுபடிக்கவேண்டுமென்றும் ஒருவரையும் ஓர் மதத்தினின்று இன்னொரு மதத்திற்குப் பெயர்க்காமல், அந்தந்த மதத்தில் அழகாயுள்ள உபதேசங்களையநுஸரிக்கச்செய்தலே மேன்மையென்றும் இச்சபை வற்புறுத்துகின்றது. உண்மையே இச்சபையின் உயர் லக்ஷ்யம். உபசாந்தமே இச்சபையோரிடம் விளங்கும்.

பிரஹ்மக்ஞான தர்சனம் எல்லா மதங்களுக்கும் ஆதாரமான தத்துவங்களின் தொகுதி. அது இம்மதத்தைத்தான் சார்ந்தது, அதைத்தான் சார்ந்தது என்று சொல்லுதல் இயலாததாம். அதன் தத்துவ விளக்க முறையானது, உலக வாழ்க்கையிற்றோன்றும் ஸம்சய விபரீதங்கள் அனைத்தையும் விலக்கி, எத்தகைய உயர்ந்த நீதிநெறியுடனும், பரமகாருண்யத்தோடும் விகாஸமுறையானது நடைபெற்று வருகிறது என்பதை நுண்ணிய விவரங்களுடன் பிரகாசப்படுத்துகின்றது. அகண்டமான வாழ்க்கையில் மரணமென்பது அடிக்கடி நேரும் ஓர் ஸ்வப்னமென்றும், ஸ்தூலதேஹம் நீங்கியவுடன் கட்டவிழ்த்து விடப்பட்டவன்போல, சிரமத்தினின்று விடுபட்டு அதிமேன்மையான ஸூக்ஷ்மலோகத்தில் ஜீவன் விழித்துக் கொள்கிறானென்றும் விவரிக்கின்றது. ஞானிகள் நிதர்சனமாயறிகின்றவாறே, நமது யுக்திக்கும் பொருத்தமாக, பற்பல மதங்களின் கொள்கைகளையும் ஆசரணைகளையும் ஸூக்ஷ்ம அர்த்தங்களுடன் விளக்குகின்றது.

பிரஹ்மக்ஞான ஸபை அங்கத்தினர்கள் இவ்வுண்மைகளைப் படித்து, அவைகளின் பிரகாரமே ஆசரிக்க முயலுவர். கற்று, உணர்ந்து அடங்கவும், உயர்நலம் பெறவும், விடாமுயற்சியோடுழைக்கவும், பிரியப்படும் ஒவ்வொருவரும் இச்சபையிற் சேரலாம். அப்படிச்சேர்ந்த ஒவ்வொருவரும் போலியாக இராமல், உண்மையான **பிரஹ்மக்ஞானியாகவே ஒழுகுவாராக.**

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | | ரூ. அ. பை |
|---|---|---|
| 1. | வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. | பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3. | இயேசு கிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. | மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0–12—0 |
| 5. | மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. | பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. | ஔவையோகக்குறள் (தமிழினின்று ஆங்கிலமொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. | ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. | இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10. | மௌனவாக்கு | 0—2—0 |
| 11. | ஸன்மார்க்க தீபம் | 0—2—0 |
| 12. | மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையார் சரித்திரம் (படத்துடன்) | 0—1—0 |
| 13. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. | காயத்ரீ | 0—1—0 |
| 16. | காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழ்மொழி பெயர்ப்பும்) | 0—1—0 |
| 17. | மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. | ஹிந்து என்பவன் எவன்? | 0—0—6 |
| 19. | லோககுருவின் அவதாரங்கள் | 0--0—6 |
| 20. | பகவான் கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. | வெள்ளியம்பலம் என்ற ஞானிகளின் சங்கம் | 0—1—0 |
| 2'. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—6 |
| 23. | உதாஸீன ஸாது ஸ்தோத்ரம் (ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் மொழிபெயர்ப்பும் | 0—6—0 |
| 24. | மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. | தேவாலயம் | 0—0—3 |
| 26. | பிரஹ்மஞானமும் பிரஹ்மஞான சபையும் | 0—0—6 |
| 27 | ஸன்மார்க்கமுறையில ஹிதோபதேசம் | 0—1—0 |
| 28. | மனீஷா பஞ்சகம் | 0—1—0 |
| 29. | குருசிஷ்ய ஸம்பந்தம் | 0—1—0 |

---

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மஞானஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியாஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.